DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

Calender }
Miscellaneous }
Preliminary Register }
Sessions } Case No.SC.**115/2023**

Deposition of Witness { PW.**14**
{ Prosecution
{

Name : **அப்பு**
Father's Name :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2025.

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.14 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் தேவூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் வசிக்கிறேன். நான் கடந்த 16.04.2018 ம் தேதி இதே காவல்

நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது தலைமைக் காவலர் 1974 பெருமாள் என்பவர் சேலம் விநாயகா மிஷன் மருத்துவமனையில்



சிகிச்சையிலிருந்த வெங்கடாசலம் த/பெ. பழனியப்பன் வயது 50 என்பவர் கொடுத்த வாக்குமூலம் பதிவு செய்து காலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த வாக்குமூலத்தை பெற்று நிலைய குற்ற எண் 58/2018 சட்டப் பிரிவுகள் 294(பி), 307, 323, 324, 342, 506(2) இதச-வாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். முதல் தகவல் அறிக்கையின் அசலை சங்ககிரி நீதித்துறை நடுவர் எண் 1 அவர்களுக்கும், நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்பு நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை வட்ட ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் இதே சம்பவம் தொடர்பாக 2ம் எதிரி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே தேதியில் வெங்கடாசலம், கந்தசாமி, பழனியப்பன் ஆகியோர்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால், சரிதான். அதன் குற்ற எண் 59/2018 என்றால், சரிதான். நான் பதிவு செய்த மேற்படி முதல் தகவல் அறிக்கை 17.04.2018 அன்றும், இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 20.04.2018 அன்றும்தான் அனுப்பினேன் என்றால், சரிதான். நான் புகார் வாக்குமூலங்களை சரியாக பார்வையிடாமல் பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- அப்பு

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.